
"TOWARDS A CREDIBLE 2020 GENERAL ELECTION IN SRI LANKA"

# நாட்டின் தேர்தல் மற்றும் எமது வாக்கு



அனுசரணை

UNDEF The United Nations Democracy Fund

FNUD Fonds des Nations Unies pour la démocratie

செயற்படுத்தும் அமைப்பு

பஃவ்ரல்

"TOWARDS A CREDIBLE 2020 GENERAL ELECTION IN SRI LANKA"

# நாட்டின் தேர்தல் மற்றும் எமது வாக்கு

**ஆக்கம்**

சட்டத்தரணி ஜகத் லியன ஆரச்சி



**பஃவ்ரல் வெளியீடு**

சுதந்திரமானதும் நீதியானதுமான
தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு
**(PAFFREL)**

இல 16, பயர்ற் பிளேஸ், பாமங்கடை வீதி, கொழும்பு 06.
தொலைபேசி - (+94) 11 2 558570 / 11 2 558571 / 11 2 558574
தொலை நகல் - (+94) 11 2 558572
மின்னஞ்சல் - parel@sltnet.lk
இணையத்தளம் - www.parel.lk

# பஃவ்ரலின் செய்தி

ஒரு நாட்டின் பிரஜைகள் அந்த தேசத்தின் உண்மையான உரிமையாளர்களாவர். பிரஜைகள் கூட்டாக இணைந்து தெரிவு செய்துகொள்ளும் பிரதிநிதிகளைக் கொண்டு ஒரு தேசத்தை ஆளும் அரசாங்கம் உருவாக்கம் பெறுகிறது. வாக்கு எனும் விலைமதிக்க முடியாத உரிமையைப் பயன்படுத்தி அந்த ஆட்சியில் மக்கள் இணைந்துகொள்கின்றனர்.

பொறுப்புமிக்க பிரஜைகள் என்ற வகையில் தேர்தல் பொறிமுறை பற்றிய மக்களின் புரிந்துணர்வை உயர்ந்த இடத்தில் வைக்க வேண்டுமென பஃவ்ரல் கருதுகிறது. இந்த நூலை வெளியிடுவதன் முக்கிய நோக்கமும் அதுவே. அந்த வகையில் முதலாவதாக, நாட்டின் தேர்தல் பொறிமுறை தொடர்பில் பொதுமக்கள் கொண்டுள்ள அறிவினை விருத்தி செய்வதற்கும், வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றியும், வாக்காளர்களின் பொறுப்புகள் மற்றும் சரியான முறையில் எவ்வாறு வாக்களிக்க வேண்டும் என்பதை எளிமையாக புரிந்துகொள்ள ஏற்ற வகையிலும் இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

தொடக்கத்திலிருந்தே இலங்கை மக்களின் அரசியல் உரிமைகள் மற்றும் வாக்குரிமைக்காக முன்வந்து செயற்படுகின்ற எமது நிறுவனம் எதிர் காலத்தில் இலங்கை மக்கள் சமூகத்துடன் கைகோர்த்து நிற்கும். அதேபோல், இலங்கையில் சிறந்ததோர் அரசியல் கலாசாரம் உருவாக்கப்படுவதை நோக்கமாகக் கொண்டுள்ள அனைவருக்கும் இந்த நூல் பயனுள்ளதாக அமைய வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

**றோஹண ஹெட்டிஆரச்சி**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**
**பஃவ்ரல் அமைப்பு**

## உள்ளடக்கம்



1. பிரஜைகளின் அரசு ........................................................ 01
2. வாக்கு எமது எதிர்காலத்தை தீர்மானிக்கின்றது .................. 04
3. தேர்தல் பொறிமுறை .......................................................... 08
4. எமது வேட்பாளர் ............................................................. 12
5. வாக்காளர் ........................................................................ 18
6. சரியாக வாக்களித்தல் ....................................................... 22
7. எம்முடன் இணைய ஒரு வாய்ப்பு ....................................... 27

# 1. பிரஜைகளின் அரசு

பிரஜைகள் மற்றும் அரசுக்கு இடையிலான தொடர்பு அதேபோல் பிரஜைகளினதும் அரசுகளினதும் கடமை மற்றும் பொறுப்புகள் பற்றி இந்த அத்தியாயத்தில் ஆராயப்படுகின்றது.

## 1.1 ஓர் அரசின் உரிமையாளர்கள்

நவீன ஜனநாயக அரசின் இறைமை மக்களுக்குச் சொந்தமானது என்ற ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கருத்து உண்டு. அரசின் மீயுயர் உரிமை எனப்படும் முழுமையான உரித்து மக்களுக்குச் சொந்தமானது என்பதன் அடிப்படையில் மக்கள் இறைமை என்ற எண்ணக்கரு உருவாக்கம் பெற்றுள்ளது. ஓர் அரசு தனக்குரிய குடிகள் என ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் பிரஜைகள் என அழைக்கப்படுவர். அதற்கிணங்க வெளி நாட்டவர்களுக்கும் குறித்த ஒரு நாட்டில் குடியுரிமை அல்லாதவர்களுக்கும் அந்த நாட்டின் இறைமையில் சொந்தம் கொண்டாட முடியாது.



## 1.2 இறைமை

மேலே குறிப்பிட்டுள்ள விதமாக ஓர் அரசின் மீது கொண்டுள்ள உரித்து பற்றிய எண்ணக்கரு இறைமை என்று அறியப்படுகின்றது. நவீன ஜனநாயக அரசுகள் மக்களுக்குச் சொந்தமாவதால் அது மக்கள் இறைமை என்று அழைக்கப்படுவதுண்டு. மக்களின் இறைமை மூன்று பிரதான அம்சங்களைக் கொண்டுள்ளது.

1. ஆட்சி தத்துவங்கள் 2. வாக்குரிமை 3. மனித உரிமைகள்





ஆட்சி தத்துவங்கள் எனப்படுவது ஓர் அரசை கொண்டியக்குவதற்கான அதிகாரமாகும். அரசொன்றை ஆட்சி புரிவதற்கான 03 துறைகள் காணப்படுகின்றன. அவையாவன நிறைவேற்றுத்துறை, நீதித்துறை மற்றும் சட்டவாக்க துறை. ஆட்சியின் பொருட்டு தாம் விரும்பும் நபர்களை தெரிவு செய்யும் அதிகாரம் வாக்குரிமையாகும். அதேபோல், மனித உரிமைகள் எனப்படுவது ஆட்சி தத்துவங்களை பிரயோகிப்பவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற அநீதிகளுக்கு எதிராக பிரஜைகள் கொண்டுள்ள சட்டரீதியான பாதுகாப்பைக் குறிக்கின்றது.

ஆகவே இறைமை 03 அம்சங்களைக் கொண்டுள்ளதாக குறிப்பிடப்படினும் அது 05 அம்சங்களை கொண்டுள்ளது. அதாவது நிறைவேற்றுத்துறை, நீதித்துறை, சட்டவாக்கம் வாக்குரிமை மற்றும் மனித உரிமைகள் என்பன.

## 1.3 மக்களின் முழுமையான உரித்து பிரயோகிக்கப்படும் விதம்

**ஆட்சி தத்துவங்கள்** - மக்கள் உரிமையின் முக்கிய பிரிவான ஆட்சித் தத்துவங்கள் உண்மையிலேயே மக்களால் பிரயோகிக்கப்படுவதில்லை. ஆட்சித் தத்துவங்களின் ஓர் அங்கமான சட்டமன்ற அதிகாரம் அதாவது சட்டமியற்றும் அதிகாரம் மக்களால் தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதி (பாராளுமன்ற உறுப்பினர்கள்)களால் மக்கள் சார்பாக பிரயோகிக்கப்படுகின்றது. ஆட்சித் தத்துவத்தின் மற்றைய அங்கமான நீதித்துறை அதிகாரம் சுயாதீன நீதிமன்றங்களினால் பிரயோகிக்கப்படுகின்றது. எவ்வாறாயினும், இறைமையின் ஓர் அங்கமான வாக்குரிமை மக்களால் நேரடியாகவே பிரயோகிக்கப்பட்டு சட்ட மன்றத்திற்கும் நிறைவேற்றத் துறைக்கும் அவசியமான மக்கள் பிரதிநிதிகளை தெரிவு செய்கின்றது. அவ்வாறே மனித உரிமைகளும் மக்களால் நேரடியாகவே பிரயோகிக்கப்படுகின்றது.

# 2. வாக்கு எமது எதிர்காலத்தைத் தீர்மானிக்கின்றது.



வாக்களிப்பதன் மூலம் மக்கள் இறைமை செயல்வடிவம் பெறுவதை விவரித்தல் அத்துடன் வாக்களித்தல் ஒவ்வொரு பிரஜையினதும் கடமை என்பதை வலியுறுத்துதல் பற்றியும், தேர்தல் ஒவ்வொன்றிலும் மக்கள் பிரதிநிதிகள் கொண்டிருக்க வேண்டிய வகிபங்கு பற்றியும் இந்த அத்தியாயத்தில் ஆராயப்படுகின்றது.

## வாக்கும் அரசும்

ஓர் அரசின் இறைமை மக்களுக்கு உரியது என்பதை நாம் முந்திய அத்தியாயத்தில் கண்டோம். இறைமையின் முக்கிய அங்கமான ஆட்சித் தத்துவங்கள் நேரடியாக மக்களால் பிரயோகிக்கப்படுவதில்லை என்பதையும் அறிந்து கொண்டோம். ஆட்சித் தத்துவங்கள் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படுகின்ற பிரதிநிதிகள் மற்றும் அவர்களால் நியமிக்கப்படுகின்றன உத்தியோகத்தர் குழாத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. ஆகவே, ஜனநாயக அரசு ஒன்றில் வாக்கு எனப்படுவது ஆட்சித் தத்துவங்களுக்காக மக்கள்தம் பிரதிநிதிகளைத் தெரிவு செய்வதற்குரிய சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. மேலும் அதனை ஆட்சி தத்துவங்களில் மக்களின் அழுத்தத்தை வெளிப்படுத்துவதற்கான வாய்ப்பாகவும் கருத முடியும்.

## வாக்கும் ஜனநாயகமும்

மக்களால் மக்களுக்காக மக்கள் பங்கேற்புடன் கொண்டுசெல்லப்படும் ஆட்சி ஜனநாயகம் எனப்படுகின்றது. ஜனநாயக ஆட்சியில் மக்களது தேவைகளின் அடிப்படையில் அரசு ஆளப்படும். மேலும், மக்களின் தேவைகளையும் விருப்பத்தையும் கண்டறிவதற்காக பயன்படுத்தப்படுகின்ற முக்கியமான சாதனமாக தேர்தல்கள் காணப்படுகின்றன. ஆகவே உரிய காலத்தில் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவது ஜனநாயக அரசின் இன்றியமையாத ஒரு பண்பாகும்.

## இலங்கையில் நடத்தப்படுகின்ற தேர்தல்கள்


இலங்கையில் முக்கியமாக நான்கு தேர்தல்கள் நடத்தப்படுகின்றன. அவையாவன,

- ஜனாதிபதித் தேர்தல்
- பாராளுமன்றத் தேர்தல்
- மாகாணசபைத் தேர்தல்
- உள்ளூராட்சித் தேர்தல்
- மக்கள் தீர்ப்பு (மக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு)

இவற்றில் மக்கள் தீர்ப்பு தவிர்ந்த ஏனைய அனைத்து தேர்தல்களும் பொது மக்களின் பிரதிநிதிகளை தெரிவு செய்வதற்காக நடத்தப்படுகின்றன. இவ்வாறு தெரிவு செய்யப்படுகின்ற மக்கள் பிரதிநிதிகளிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற வகிபாகங்கள் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாகும்.

## பாராளுமன்ற உறுப்பினரின் வகிபாகம்

பாராளுமன்றத்தில் ஆற்றப்படும் மூன்று பணிகள் உள்ளன. அவையாவன சட்டம் இயற்றுதல், நிதிக் கட்டுப்பாடு மற்றும் கொள்கை வகுப்பு. அதேபோல் நிறைவேற்றுத்துறையின் முக்கிய அலகான, அமைச்சரவைக்கான உறுப்பினர்கள் பாராளுமன்றத்தினால் தெரிவு செய்யப்படுகின்றனர். பாராளுமன்றம் எனப்படுவது தேசிய ரீதியான ஒரு நிறுவனமாகும். ஆகவே, பாராளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்படுகின்ற வேட்பாளர் சட்டம் இயற்றுதல், நிதிக் கட்டுப்பாடு அத்துடன் கொள்கை வகுப்பு போன்ற விடயங்களுக்கான இயலுமையையும் தொலை நோக்கையும் கொண்டிருக்க வேண்டும். அதேபோல் தேசிய ரீதியான தேவைகள் தொடர்பில் புரிதலும் கூருணர்வை கொண்டவருமாக இருக்க வேண்டும்.




## மாகாணசபை உறுப்பினரின் வகிபாகம்

மாகாணசபையின் நோக்கெல்லையில் அடங்கும் விடயப் பரப்புகள் தொடர்பில் நியதிச் சட்டங்களை வகுத்தல், மாகாணசபை நிதிக் கட்டுப்பாடு, மாகாணத்தில் அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ளத் தேவையான கொள்கை ரீதியான தீர்மானங்களை தேசிய கொள்கைகள் மற்றும் திட்டமிடல்களுக்கு அமைவாக வகுப்பதும் நடைமுறைப்படுத்துவதும் மாகாண சபையின் பணிகளாகும். எனவே, மாகாண சபைக்குத் தெரிவு செய்யப்படுகின்ற வேட்பாளர் இந்தப் பணிகளை ஆற்றுவதற்கான இயலுமை மற்றும் தொலைநோக்கு உடையவராக இருக்க வேண்டும். அதேபோல், தனது மாகாண சபைக்காக தேசிய மட்ட நிறுவனங்களுடன் துணிவு கொண்டு பேரம் பேசும் ஆற்றல் அவருக்கு இருக்க வேண்டும். அவ்வாறான சந்தர்ப்பங்கள் உருவாகும்போது தனது அரசியல் கட்சியைச் சேர்ந்த, தேசிய அரசியலில் அங்கம் வகிக்கின்ற அமைச்சர்களாயினும் அவர்களுடன் போராடுவதற்கு தயாராக வேண்டும். பிரதேசத்து மக்களின் வாழ்வியல், அங்குள்ள வளங்கள் மற்றும் இயற்கை வளங்கள் தொடர்பில் மேலான புரிதல் கொண்ட ஒருவராக இருக்க வேண்டும்.

## உள்ளூராட்சி உறுப்பினரின் வகிபாகம்

பிரதேச அபிவிருத்தி உள்ளூராட்சி நிறுவனத்தின் முக்கிய நோக்கமாகும். ஆகவே அதற்குத் தேவையான துணைச் சட்டங்களை வகுத்தல், அபிவிருத்தி திட்டமிடல்கள், வரவு செலவு திட்டத்தைத் தயாரித்தல், மக்கள் பயன்பாட்டுச் சேவைகளை முன்னெடுத்தல் மற்றும் பொது சுகாதாரமும் பாதுகாப்பும் உள்ளூராட்சி நிறுவனமொன்றின் பிரதான பணிகளாகும். ஆகவே, உள்ளூராட்சி உறுப்பினர் ஒருவர் சம்பந்தப்பட்ட பிரதேசம் தொடர்பில் சிறந்த புரிதலையும் சிறந்த மக்கள் தொடர்பினையும் கொண்டிருக்க வேண்டும். அதைப்போல் மக்களுடன் மிகுந்த நெருக்கத்தைக் கொண்டிருப்பவராகவும் விளங்க வேண்டும்.


## மக்கள் பிரதிநிதியின் வகிபாகத்தை சரியாக புரிந்துகொள்வதன் முக்கியத்துவம்

இலங்கையில் காணப்படுகின்ற 03 ஆட்சி மட்டங்களில் மக்கள் பிரதிநிதிகள் கொண்டுள்ள பணிகளும் பொறுப்புகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டன என்பது மேலே தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்து தெளிவாகிறது. ஆகவே, தேர்தல் ஒன்றில் வேட்பாளர் ஒருவருக்கு வாக்களிக்கும்போது அந்தப் பணிகளை வெற்றிகரமாக நிறைவு செய்யக்கூடிய மிகவும் பொருத்தமானவரைத் தெரிவு செய்ய வேண்டும். அதன்போது, தனியே பேச்சாற்றல், உடற் தோற்றம், அரசியல் ரீதியான உறவு முறை, பணம், செலவு செய்யும் ஆற்றல், திருமண நிகழ்வுகள் மற்றும் மரண சகாய நிகழ்வுகளில் கலந்துகொண்டுள்ள தடவைகளின் எண்ணிக்கை மற்றும் ஆதரவாளர்களுக்காக முன்வருதல் போன்ற விடயங்களுக்கு அப்பால், அந்த மக்கள் பிரதிநிதியிடமிருந்து உண்மையாகவே எதிர்பார்க்கப்படுகின்ற வகிபாகத்திற்குரிய பணிகளை நிறைவேற்றுவதற்கு அவர் அத்தகைய ஆளுமையை கொண்டுள்ளாரா என்பதைப் பற்றிச் சிந்தித்தல் நாட்டின் எதிர்காலத்திற்கு மிகவும் முக்கியமானது.

ஆகவே, வாக்களித்தல் ஜனநாயக அரசின் இன்றியமையாத ஓர் அம்சமாக இருப்பதுடன், அது மக்கள் இறைமை மற்றும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்திற்கு செயல்வடிவம் தருகின்ற உன்னதமான செயல் என்பதையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. வாக்காளர் தமது வாக்கினையும், விருப்பு வாக்கினை அளிக்கும்போது மக்கள் பிரதிநிதியிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற வகிபாகத்தை சரியான முறையில் புரிந்துகொண்டு பொருத்தமான வேட்பாளர்களை தெரிவுசெய்ய வேண்டும். அது அவரின் பொறுப்பாகும்.

# 3. தேர்தல் பொறிமுறை

இந்த அத்தியாயத்தில் தேர்தலை நடத்துவதற்குரிய நிர்வாகப் பொறிமுறை மற்றும் தேர்தலொன்றில் வாக்களிப்பதற்கு அவசியமான வாக்காளர் இடாப்பு பற்றி ஆராயப்படுகின்றது.



இலங்கையில் தேர்தல் நாட்காட்டி நடைமுறையில் இல்லையென்பதால், தேர்தல் நடத்தப்படுவதற்கான காலப்பகுதி மற்றும் திகதியை தீர்மானிப்பதற்கான ஏற்பாடுகள் அரசியலமைப்பு மற்றும் அந்தந்த தேர்தல் சட்டங்களில் தெரிவிக்கப்பட்டுள்ளன. எவ்வாறாயினும், மக்கள் தேர்தலில் வாக்களிப்பதற்கான சந்தர்ப்பத்தை தேர்தல் ஆணைக்குழு வருடாந்தம் தொடர்ச்சியாக ஏற்படுத்தி வருகின்றது. அச்செயற்பாட்டின் முக்கிய அம்சங்களை பின்வருமாறு விபரிக்கலாம்.

## வாக்காளர் இடாப்பு

18 வயதைப் பூர்த்தி செய்தவர்களுக்கு வாக்களிக்கும் உரிமையுள்ள போதும் தேர்தல் ஒன்றில் வாக்களிக்க வேண்டுமாயின் உரிய ஆண்டின் வாக்காளர் இடாப்பில் தமது பெயர் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்.




வாக்காளர் இடாப்பினை ஒவ்வோராண்டும் இற்றைப்படுத்தும் பணி மே மாதம் ஆரம்பிக்கப்படுகின்றது. செப்டம்பர் மாதம் ஆட்சேபனைகளை தெரிவிக்கும் பொருட்டு கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் மற்றும் தேர்தல் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வாக்காளர் இடாப்பு பார்வைக்கு வைக்கப்படும். தமது பெயர் வாக்காளர் இடாப்பில் சேர்க்கப்படவில்லையெனின், அதற்கான மேன்முறையீட்டைச் செய்வதற்கும், பொருத்தமற்ற ஒருவரின் பெயர் சேர்க்கப்பட்டிருந்தால் அல்லது சேர்க்கப்பட்டுள்ள பெயர் தவறாக இருந்தால் அதற்கான ஆட்சேபனையைத் தெரிவிக்கவும் அனைவருக்கும் உரிமை உண்டு. ஆட்சேபனையைத் தெரிவிக்கும் இறுதித் திகதி டிசம்பர் மாதத்தின் ஒரு திகதியாக இருக்கும்.

## தேர்தல் தொடர்பான அறிவிப்பு

தேர்தல் நடத்தப்படுவதற்கான திகதியை அறிவிக்கும் பொறுப்பு ஜனாதிபதி / தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரியது. எனினும், தேர்தல் தொடர்பான அறிவிப்பை வெளியிடுவதால் மட்டும் அனைவருக்கும் வாக்களிப்பதற்கான உரிமை கிடைக்காது. வாக்களிக்க வேண்டிய திகதி மற்றும் வாக்கெடுப்பு நிலையம் தொடர்பான விபரங்களைக் காட்டும் அறிவித்தலொன்று தேர்தல் ஆணைக்குழுவினால் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். அது "உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை" என அறியப்படும். அந்த அறிவித்தலானது உரிய ஆண்டின் வாக்காளர் இடாப்பில் பெயர் சேர்க்கப்பட்டுள்ளவர்களுக்கு மட்டுமே அனுப்பி வைக்கப்படும்.

## தேர்தலை நடத்துதல்

தேர்தல் ஆணைக்குழு தேர்தலை நடத்தும் அதிகாரத்தை கொண்டிருக்கும். அதேபோல், வாக்காளர் இடாப்பை இற்றைப்படுத்தலும் தேர்தல் ஆணைக்குழுவின் பணியாகும். தேர்தல் ஆணைக்குழு 03 உறுப்பினர்களைக் கொண்டிருப்பதோடு அதன் கீழ் தேர்தல் செயலகம் செயற்படும். ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட தேர்தல் அலுவலகங்கள் இயங்கி வருவதோடு அவற்றின் மூலம் அந்தந்த மாவட்டத்திற்குரிய தேர்தல் மற்றும் வாக்காளர் இடாப்பு தொடர்பான பணிகள் முன்னெடுக்கப்படும்.

- **பாராளுமன்றத் தேர்தலில் நிர்வாகச் செயற்பாட்டின் பல்வேறு மட்டங்களும் உத்தியோகத்தர்களும்**

| | |
|---|---|
| தேசிய மட்டம் | • தேர்தல் ஆணைக்குழு<br>• பணிப்பாளர் தலைமை அதிபதி<br>• செயலாளர் |
| | **தேர்தல் செயலகம்**<br>• மேலதிக தேர்தல் ஆணையாளர் (பாராளுமன்றத் தேர்தல்)<br>• பிரதித் தேர்தல் ஆணையாளர் |
| மாவட்ட மட்டம் | • தெரிவத்தாட்சி அலுவலர் |
| | • உதவி தெரிவத்தாட்சி அலுவலர்<br>• (உதவி தேர்தல் ஆணையாளர்) |
| வலைய மட்டம் | • உதவி தெரிவத்தாட்சி அலுவலர் |
| வாக்கெடுப்பு நிலைய மட்டம் | • சிரேட்ட தலைமைதாங்கும் உத்தியோகத்தர் |
| | • கனிட்ட தலைமைதாங்கும் உத்தியோகத்தர் |
| | • வாக்கெடுப்பு நிலைய உத்தியோகத்தர்கள் |
| | • கிராம உத்தியோகத்தர் |

# 4. எங்கள் வேட்பாளர்



வேட்பாளர்கள் மத்தியிலிருந்து குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களைத் தெரிவு செய்வதற்காக தேர்தல் நடத்தப்படுகின்றது. எனவே, தேர்தலொன்றில் வேட்பாளர்கள் கட்டாயத் தரப்பினராவர். வேட்பாளர்களின் தகைமைகள், தகைமையீனங்கள் மற்றும் வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்யும்போது வாக்காளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் பற்றி இந்த அத்தியாயத்தில் விபரிக்கப்படுகின்றது.

## வேட்பாளர் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள்

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
- 18 வயதைப் பூர்த்தி செய்தவராக இருக்க வேண்டும்.

## வேட்பாளர் ஒருவரின் தகைமையீனங்கள்

- இலங்கைப் பிரஜை அல்லாதவராக இருத்தல்.
- 18 வயதைப் பூர்த்தி செய்யாதவராக இருத்தல்.

- நீதித்துறை பணியாளராக இருத்தல்.
- ஆயுதம் தாங்கிய படைகளின் உறுப்பினராக இருத்தல்.
- பொலிஸ் உத்தியோகத்தராக இருத்தல்.
- அரசாங்கத்தின் ஏதேனும் திணைக்களத்தில் பணியாற்றும் அரசு உத்தியோகத்தராக இருத்தல்.
- அரசாங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றின் பணியாளராக இருத்தல்.
- சித்த சுவாதீனம் அற்றவராக இருத்தல்.
- வங்குரோத்து நிலையை அடைந்தவரென அறிவிக்கப்பட்டுள்ளவர்கள்.
- வெளிநாட்டில் குடியுரிமை பெற்றவராக இருத்தல்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள அரச உத்தியோகத்தர்களில், அரசியலில் ஈடுபடும் உரிமையைக் கொண்டிராத உத்தியோகத்தர்கள் தேர்தல் ஒன்றில் வேட்பாளர்களாக களமிறங்க வேண்டுமாயின், வேட்பு மனுவை தாக்கல் செய்வதற்கு 07 நாட்களுக்கு முன்னர் தான் பதவியை ராஜினாமா செயவைதாக அல்லது சேவையிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவிக்க வேண்டும். அதேபோல், அரசியலில் ஈடுபடும் உரிமையைக் கொண்டுள்ள ஒருவர் வேட்புமனுவைத் தாக்கல் செய்வதற்கு 10 நாட்களுக்கு முன்னர் சம்பளமற்ற லுவினைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

## வேட்பாளரின் பொறுப்புக்கள்

தேர்தல் ஒன்றில் வேட்பாளர் நிலை என்பது ஒரு பொறுப்பாகும். அது தேர்தல் வெற்றிக்கு மட்டும் கட்டுப்படுத்தப்படுவது இல்லை. ஒரு வேட்பாளருக்குரிய முக்கியமான சட்டரீதியான பொறுப்பு யாதெனில், சொத்துகள் மற்றும் பொறுப்புகள் வெளிப்படுத்தல் சட்டத்தின்கீழ் அவர் தனது சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தொடர்பான விபரத்தை தேர்தல் ஆணைக்குழுவுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

அதேபோல் தேர்தல் சட்டங்களுக்கு அமைவாக பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதும், தமது பிரசார நடவடிக்கைகளுக்காக அரச சொத்துக்களை பயன்படுத்தாதிருப்பதும் வேட்பாளர்களின் பொறுப்பாகும்.

மேலும், தேர்தலில் வெற்றிபெற்ற பின்னர் தனது கொள்கைப் பிரகடனத்தை நடைமுறைப்படுத்துவதும், தான் தெரிவு செய்யப்பட்டுள்ள பொதுமக்கள் சபைக்குரிய பொறுப்புகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுத்தலும் அத்துடன் உறவினர்கள், நண்பர்களுக்கான உபசரணை அல்லது கோஸ்டி வாதத்தில் ஈடுபடாமல் இருப்பதும் அவர்களின் பொறுப்பாகும்.

## வேட்பாளர்களுக்கான மார்ச் 12 நியதிகள்

தேர்தலொன்றில் விருப்பு வாக்களிப்பதற்காக வேட்பாளர்கள் கொண்டிருக்க வேண்டிய தகுதிகள் மற்றும் தகுதியீனங்கள் தொடர்பான நியதிகள் சிலவற்றை மார்ச் 12 இயக்கம் அறிமுகம் செய்துள்ளது. அதற்கமைய வேட்மனுக்கள் வழங்கப்பட்டுள்ளனவா வழங்கப்படவில்லையா என்ற விபரத்தை வேட்பாளர் பெயர் பட்டியலை ஆராய்வதன் மூலம் உறுதிசெய்து கொள்ள முடியும்.





## மார்ச் 12 நியதிகளுக்கமைய ஒரு சிறந்த வேட்பாளர் கொண்டிருக்க வேண்டிய பண்புகள்.

- ஒட்டுமொத்த மக்கள் சமூகத்திற்கும் கூருணர்வுடைய, உலகளாவிய நோக்கு மற்றும் சுதேச சிந்தனை கொண்ட, சட்டங்கள் மற்றும் கொள்கை வகுப்பு அத்துடன் நிதி முகாமைத்துவ ஆற்றல் கொண்ட யதார்த்த மனிதனாக இருக்க வேண்டும்.
- குற்றவியல் சார்ந்த தவறொன்றுக்கு சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட அல்லது இடைநிறுத்திய சிறைத்தண்டனைகளுக்கு உள்ளாக்கப்படாத ஒருவராக இருத்தல் வேண்டும்.

- இலஞ்சம் அல்லது ஊழல் தொடர்பில் குற்றவாளியாக்கப்படாத, சமூக அங்கீகாரம் பெற்ற, நன்னடத்தையுள்ள ஒருவராக இருத்தல் வேண்டும். அதேபோல், இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களுக்கு உள்ளானவர்கள் பற்றி விழிப்படன் இருத்தல் வேண்டும்.
- மதுசாரம், போதைப்பொருள், சூதாட்டம், கெசினோ, விலைமாதர் விடுதி உட்பட நாட்டின் நல்லிருப்பிற்குப் பங்கம் விளைவிக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த அல்லது ஈடுபட்டுவரும் ஒருவராக இராதிருத்தல்.
- உயிர்மூலக் கட்டமைப்பைச் சிதைத்துவிடும் சுற்றாடல் ரீதியாக தீங்கு பயக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டுவந்த அல்லது ஈடுபட்டுவரும் ஒருவாக இராதிருத்தல்.
- மக்கள் பிரதிநிதி ஒருவராவதற்கு முன் நாட்டிற்கு பின்னடைவை ஏற்படுத்தக்கூடிய நிதிசார் ஒப்பந்தங்களைச் செய்துகொண்ட மற்றும் மக்கள் பிரதிநிதி ஒருவராக இருந்துகொண்டு தமது அரசியல் அதிகாரத்தைத் துஷ்பிரயோகம் செய்து அரசாங்கத்துடன் நிதிசார் ஒப்பந்தங்களைச் செய்துகொண்ட அல்லது அத்தகைய ஒப்பந்தமொன்றின் தரப்பினர் ஒருவராக இராதிருத்தல்.

## பெண் வேட்பாளர்களின் முக்கியத்துவம்



இல நாட்டின் சனத்தொகையில் 52 சதவீதமானோர் பெண்களாக இருப்பினும் பாராளுமன்றம் மற்றும் மாகாண சபையில் பெண்களின் பிரதிநிதித்துவம் மிகவும் குறைவாகவே உள்ளது. ஆகவே, பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க வேண்டிய தேவை காணப்படுகின்றது. அந்தவகையில் அரசியல் கட்சிகளும் சுயேட்சைக் குழுக்களும் தத்தமது வேட்பாளர் பட்டியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதற்கு நியாயமான ஒதுக்கீட்டை வழங்குவது மிகவும் பொருத்தமானது. எவ்வாறாயினும், இறுதியாக மாவட்ட வேட்பாளர் பட்டியலில் இடம் பெறும் வேட்பாளர்களை ( ஆண்/ பெண்) பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யும் உரிமை வாக்காளர்களிடம் ஏ உள்ளது.

## இளையோர் பங்கேற்பின் முக்கியத்துவம்



இலங்கை சனத்தொகையில் இளையோரின் தொகைக்கு ஏற்றதான மக்கள் பிரதிநிதிகளின் எண்ணிக்கை மிகவும் குறைவானது. அதேபோல் இளைஞர் யுவதிகளுக்கு அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில் வேட்புமனுவை பெற்றுக்கொள்ள காணப்படுகின்ற வாய்ப்பும் அரிதானது. ஆகவே இளையோரின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பதன் பொறுப்பு அரசியல் கட்சிகளுக்கும் சுயேட்சைக் குழுக்களும் உள்ளதைப் போலவே பட்டியலில் இடம் பெறுகின்ற இளையோருக்கு வாக்களிப்பதன் மூலம் வாக்காளர்களும் அந்தப் பொறுப்பினை நிறைவேற்ற முடியும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும்.

## தேர்தலில் களமிறங்கியுள்ள வேட்பாளர்களுக்கு புள்ளி வழங்கல்

தேர்தல் நாளன்று யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்ற நியாயமான முடிவினை எடுப்பதற்காக மார்ச் 12 இயக்கத்தால் அறிமுகம் செய்யப்பட்டுள்ள **"உங்கள் வாக்கு பெறுமதியானது - வாக்களிக்குமுன் வேட்பாளர்களுக்கு புள்ளிகள் வழங்குவோம்"** புள்ளி வழங்கும் அட்டையை ஆதாரமாகக் கொள்ள முடியும்.

அதற்கு மேலதிகமாக நடாத்தப்படவிருப்பது பாராளுமன்றத்தேர்தல் என்ற காரணத்தினால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றவேண்டிய வகிபாகமான சட்டம் இயற்றுதல், நிதிக் கட்டுப்பாடு மற்றும் கொள்கை வகுப்பு விடயத்தில் ஆற்றலும் திறமையும் சம்பந்தப்பட்ட வேட்பாளரிடம் உள்ளதா என்பதை கவனத்தில் கொள்க.

### உங்கள் வாக்கு பெறுமதியானது. - வாக்களிக்குமுன் வேட்ாபாளர்களுக்கு புள்ளிகள் வழங்குவோம்.

| **அரசியல் கட்சி / சுயேச்சைக் குழு** | **உங்கள் வட்டாரத்தில் போட்டியிடும் வேட்பாளர்கள்** | நியாயமான முறையில் பணம் கம்பாதிப்பவர் | அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தாதவர் | இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுக்கு ஆளாகாதவர் | நீங்கள் எப்போதும் சந்திக்கக் கூடிய நெருக்கமான ஒருவர் | சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படுத்தாதவர் | சமூக சேவையாற்ற சிறந்தவர் | சகல இன, மத மற்றும் கலாசாரத்தை மதிப்பவர் | மொத்தப் புள்ளிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |

ஒவ்வொரு நியதிபடி வேட்பாளருக்கு புள்ளி வழங்கும் முறை

| | |
|---|---|
| மிக நன்று | 08 – 10 |
| நன்று | 05 – 07 |
| சாதாரணம் | 02 – 04 |
| பலவீனம் | 00 – 02 |

ஒவ்வொரு வேட்பாளருக்கும் உரிய மொத்தப் புள்ளிகளை கணித்து மிகப் பொருத்தமான வேட்பாளரைத் தெரிவு

சாதுரியமாக வாக்களிப்போம். உங்கள் உள்ளூர் அதிகார சபைக்குத் தகுதியானவர்களை மட்டும் தெரிவுசெய்வோம்.

மார்ச்சு 12 இயக்கத்தின் செய்தி



**தனிப்பட்ட பாவனைக்கு மட்டும். பூர்த்தி செய்த அட்டைகளை கைமாற்ற வேண்டாம்**

# 5. வாக்காளர்

தேர்தல் ஒன்றில் வாக்காளர்கள் மிகவும் முக்கியமான ஒரு தரப்பினராவர். வாக்காளர்கள் இன்றி தேர்தலை நடத்த முடியாது. இந்த அத்தியாயத்தில் வாக்காளர்களின் தகைமைகள், தகைமையீனங்கள் மற்றும் பொறுப்புகள் பற்றி ஆராயப்படுகின்ற.து.



## 5.1 வாக்காளர்களின் தகைமைகள்

- 18 வயதை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.
- தேர்தலுக்குரிய ஆண்டின் வாக்காளர் இடாப்பில் தமது பெயர் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

## வாக்காளர்களின் தகமையீனங்கள்

- நீதிமன்றம் ஒன்றினால் சித்த சுவாதீனம் அற்றவரென அறிவிக்கப்பட்டிருத்தல்.
- தேர்தல் ஒன்றில் மோசடி தொடர்பான தவறு ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு வருடங்கள் கழியாதிருத்தல்.
- இலஞ்சச் சட்டத்தின் கீழான தவறு ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்ட திகதியிலிருந்து மூன்று வருடங்கள் கழியாதிருத்தல்.
- குடியுரிமை பறிக்கப்பட்ட ஒருவரின், குடியுரிமை பறிக்கப்பட்ட காலம் நிறைவடையாதிருத்தல்.
- தண்டனைச் சட்டத்தின் கீழான பாரதூரமான தவறு ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கழியாதிருத்தல்.
- ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றை அவமதித்த தவறு ஒன்றுக்கு குற்றவாளியாக்கப்பட்ட திகதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கழியாதிருத்தல்.

## 5.4 வாக்காளர்களின் பொறுப்புக்கள்

உங்களுக்கு உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை கிடைத்திருக்குமாயின் நீங்கள் வாக்காளராக தகைமை பெற்றுள்ளீர்கள் என்பது அதன் பொருளாகும். அதாவது, மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகமையீனங்களுக்கு உட்படாமல் தேர்தலில் வாக்களிப்பதற்கான தகைமையைப் பெறுகிறீர்கள்.

மேலும், நீங்கள் ஒரு பிரஜை என்பதையும் மறக்கக்கூடாது. ஒரு பிரஜை என்ற வகையில் மக்கள் இறைமையின் பிரதான உரித்து வாக்குரிமையாதலால், வாக்களித்தல் வாக்காளரின் தலையாய கடமையாககும்.

வாக்களிக்கும்போது தேர்தலில் களமிறங்கியுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களில், சட்டம் இயற்றுதல், நிதிக் கட்டுப்பாடு மற்றும் கொள்கை வகுப்பு போன்ற விடயங்களுக்கு மிகவும் பொருத்தமான கட்சி / சுயேச்சைக் குழுவுக்கு வாக்களிப்பது வாக்காளரின் பொறுப்பாகும்.



அதேபோல் வாக்களித்த பின்னர் விருப்பு வாக்கு / விருப்பு வாக்குகளை அளிக்கும்போது சட்டம் இயற்றுதல், நிதிக் கட்டுப்பாடு மற்றும் கொள்கை வகுப்பு போன்ற விடயங்களுக்கு தகுதியான அதேபோல் இதற்கு முந்திய அத்தியாயங்களில் விபரிக்கப்பட்டுள்ள நியதிகளுக்கு அமைவாக தெரிவுசெய்த வேட்பாளர் / வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்கு அளிப்பதும் வாக்காளர்களின் பொறுப்பாகும்.

## 5.6 தேர்தல் ஒன்றின் பின்னர் வாக்காளர்களின் வகிபாகம்

வாக்களிப்பதால் மட்டும் வாக்காளரின் பொறுப்பு முடிந்து விடுவதில்லை. தான் வாக்கினையும், விருப்பு வாக்கினைப் அளித்த அரசியல் கட்சி / சுயேச்சைக் குழுக்கள் மற்றும் வேட்பாளர்கள் முறையாக செயலாற்றுகின்றனரா என்பதில் விழிப்புணர்வுடன் இருப்பதும், தேர்தல் சமயத்தில் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்படுகின்றனவா என்பதை ஆராய்வதும் மற்றும் அதற்கான தூண்டுதலை ஏற்படுத்துவதற்கும் வாக்காளர்கள் முனைப்பு காட்ட வேண்டும். அதனை தனியாக அல்லது கூட்டாக இணைந்து மேற்கொள்ள முடியும்.

குறிப்பாக, மக்களின் பாதுகாப்பை துச்சமாக மதித்து, தனது தனிப்பட்ட நலனுக்காக அரசியல் பயன்படுத்தப்படுமானால் அதனை எதிர்க்கும் பொறுப்பிலிருந்து வாக்காளர்கள் விடுபட முடியாது.



தனது வாக்கினைப் பெற்று பாராளுமன்றம் சென்றுள்ள நபர், பாராளுமன்ற உறுப்பினராக செயல்படுகின்றாரா என்பதைக் கவனிக்க வேண்டும். குறித்த உறுப்பினர் பாராளுமன்றத்திற்கு செல்லுதல், விவாதங்களில் பங்கெடுத்தல், பாராளுமன்றத்தில் பொது மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக குரல் எழுப்புதல், பொதுமக்கள் சார்பாக மனுக்களைச் சமர்ப்பித்தல் அத்துடன் பாராளுமன்றத்தில் காணப்படுகின்ற குழுக்களை பிரதிநிதித்துவம் செய்கின்றாரா என்பதைப் பற்றியும் விழிப்புணர்வுடன் இருப்பது வாக்காளர்களின் பொறுப்பாகும்.

# 6. சரியாக வாக்களித்தல்

இந்த அத்தியாயத்தில் வாக்கெடுப்பு நிலையம் ஒன்றின் செயற்பாடுகளும், வாக்களித்தல் பற்றியும் ஆராயப்படுகின்றது.

## 1. வாக்கெடுப்புத் திகதி

வாக்கெடுப்பை நடத்த வேண்டிய திகதியை முதலாவதாக அறிவிக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உள்ளது. அந்தத் திகதியில் வாக்கெடுப்பை நடத்த முடியாவிட்டால் ஒரு திகதியொன்றை அறிவிப்பதற்கான அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உண்டு. அதற்கமைய இம்முறை நடத்தப்படுகின்ற பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்கெடுப்பு 2020 ஆகஸ்ட் மாதம் 05ஆம் திகதி நடத்தப்படும்.

## 2. வாக்கெடுப்புக்குரிய கால எல்லை

பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம் உட்பட தேர்தல்கள் தொடர்பான ஏனைய தேர்தல் சட்டங்களிலும், வாக்கெடுப்பு நடத்தப்படும் திகதியில் முற்பகல் 7.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணிவரை வாக்கெடுப்பை நடத்த வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், வாக்கெடுப்பை நடத்துவதற்குரிய கால எல்லையில் மாற்றங்களை கொண்டு வரும் அதிகாரம் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உள்ளதென தேர்தல் சட்டங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், காலையிலேயே வாக்களிக்கச் செல்வது மிகவும் உசிதமானது.

## 3. வாக்களிக்கச் செல்லும்போது எடுத்துச் செல்ல வேண்டியவை

ஒவ்வொரு வாக்காளரும் வாக்கெடுப்பு நிலையத்திற்கு செல்லும் போது இவ்விரு ஆவணங்களை எடுத்துச் செல்ல வேண்டும்.

1. வாக்களிப்பதற்காக பயன்படுத்தக்கூடிய ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாள அட்டை.
2. உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டை

எனினும், கோவிட் 19 தொற்று காரணமாக சுகாதார பணிப்பாளர் நாயகத்தால் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தலுக்கு அமைய முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும் என்பதோடு, பேனை ஒன்றையும் எடுத்துச் செல்ல வேண்டும்.

இவை தவிர, குடை போன்ற தேவைப்படுகின்ற பொருளை எடுத்துச் செல்லலாம். அதை விடுத்து பைகள் போன்றவற்றை எடுத்துச் செல்வது உங்களுக்கும் தேர்தல் கடமையில் உள்ள உத்தியோகஸ்தர்களுக்கும் சிரமமாக அமையும்.

## 4. வாக்களிப்பதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள அடையாள அட்டைகள்

1. ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள தேசிய அடையாள அட்டை.
2. செல்லுபடியாகும் கடவுச் சீட்டு.
3. செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.
4. ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம் / பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டுள்ள ஓய்வூதிய அட்டை.
5. சமூக சேவைகள் பணிப்பாளர் நாயகம் / பிரதேச செயலாளரால் வழங்கப்பட்டுள்ள முதியோர் அடையாள அட்டை.
6. மதகுருமாருக்கான அடையாள அட்டை.
7. உதவித் தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்படும் தற்காலிக அடையாள அட்டை.
8. ஆட்பதிவுத் திணைக்களத்தால் குறித்த தேர்தலுக்காக வழங்கப்பட்டுள்ள தற்காலிக அடையாள அட்டை.

இவை தவிர வாக்கெடுப்பு நிலையத்தில் வேறு அடையாள அட்டைகள் ஏற்றுக்கொள்ளப்படாததால் 01 தொடக்கம் 06 வரையான அடையாள அட்டைகளில் ஒன்றேனும் தம்வசம் இல்லையெனின், உள்ளவை தெளிவற்றவையாக இருந்தால் 07 மற்றும் 08ஆவதாக குறிப்பிடப்பட்டுள்ள அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## 5. வாக்குச்சீட்டு கொடுக்கப்படுவதற்கு உடன்முன்னதாக

1. தேருநர் இடாப்பின் பிரதியில் கூறப்பட்டவாறான வாக்காளரின் இலக்கமும், பெயரும் விவரணமும் கூப்பிடப்படுதல் வேண்டும்.
2. அடையாள அட்டையைப் பரிசோதித்து வாக்காளரின் அடையாளத்தை உறுதி செய்துகொள்ள வேண்டும்.
3. வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் ஆட்சேபனைகள் இருப்பின் தெரிவிக்க வேண்டும்.

4. வாக்காளரின் இலக்கமானது அடியிதழ்த்தாளிற் குறிக்கப்பட்டு அதிலிருந்து வாக்குச்சீட்டு கிழிக்கப்படுதல் வேண்டும்.

5. வாக்குச்சீட்டில் அலுவலக முறையான குறியீட்டை இட வேண்டும்.

6. வாக்காளர் வாக்குச்சீட்டொன்றைப் பெற்றுள்ளாரென்பதைக் குறிப்பதற்காக, அவருக்குக் கிடைத்த குறிப்பான வாக்குச்சீட்டைக் காண்பியாது. வாக்காளரின் பெயருக்கெதிரே இடாப்பில் குறியீடொன்று இடப்படுதல் வேண்டும்.

7. வாக்காளருக்கு அதன் பின்னர் வாக்குச் சீட்டினை வழங்குதல்.

பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த ஏற்பாடுகளுக்கு மேலதிகமாக இத் தேர்தலானது covid-19 தொற்றுக்கு மத்தியில் நடத்தப்படுவதால் வாக்கெடுப்பு நிலையத்தினுள் பிரவேசிக்கும்போதும், அங்கிருந்து வெளியேறும்போதும் கிருமி அழிப்பு திரவத்தைப் பயன்படுத்தி வாக்காளர்களின் கைகளை சுத்தம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அதேபோல், வாக்கெடுப்பு நிலையத்தில் இருக்கும்போது சமூக இடைவெளியை பேணுவதற்காக குறியீடுகள் இடப்பட்டுள்ளவாறு தமக்குரிய இடத்தில் நிற்க வேண்டும்.

## வாக்குச்சீட்டு கிடைத்த பின்னர்

முதலாவதாக தாம் விரும்பும் அரசியல் கட்சிக்குரிய சின்னம் அல்லது சுயேச்சைக் குழுவின் இலக்கத்திற்கு எதிரே உள்ள கூண்டினுள் புள்ளடியிட வேண்டும். வாக்குச் சீட்டில் ஒரே விதமான சின்னங்கள் இருக்க வாய்ப்பு உள்ளதால் புள்ளடி இடுமுன்னர் சரியாக கவனிக்க வேண்டும். ஒன்றுக்கும் மேற்பட்ட சின்னங்களுக்கு எதிரே புள்ளடி இடப்படும் வாக்குச்சீட்டுகள் நிராகரிக்கப்படுவதால் நீங்கள் ஒரு சின்னத்தின் எதிரேயுள்ள கூண்டில் மட்டும் புள்ளடி இட வேண்டும்.


இரண்டாவதாக தாம் விரும்பும் வேட்பாளர் ஒருவருக்கு, இருவருக்கு அல்லது மூவருக்குரிய இலக்கத்தின் மீது புள்ளடி இட வேண்டும்.

03 இலக்கங்களுக்கு மேல் புள்ளயிடப்படுகின்ற வாக்குச்சீட்டுகள் கவனத்தில் கொள்ளப்படுவதில்லை என்பதால் அதிகபட்சமாக மூன்று இலக்கங்களுக்கு மட்டுமே புள்ளடி இடவேண்டும்.

புள்ளடி இடப்பட்ட வாக்குச்சீட்டை மடித்து வாக்குப் பெட்டியினுள் இட வேண்டும்.

## மேலதிக விடயங்கள்

- குருட்டுத் தன்மை அல்லது உடல்ரீதியான இயலாமை காரணமாக வாக்களிக்க முடியாதவர்களுக்கு தலைமை தாங்கும் அலுவலரின் பணியாளர்களது உதவியுடன் வாக்காளரின் அறிவுறுத்தல்படி வாக்குச் சீட்டில் புள்ளடியிட்டு வாக்குப் பெட்டியில் இடவேண்டும்.
- வாக்களிக்கும்போது கவனக்குறைவு காரணமாக தவறு ஏற்பட்டால் அதனை தலைமை தாங்கும் அலுவலருக்கு சுட்டிக்காட்ட முடியும் என்பதோடு, அவர் அதில் திருத்தியடைந்தால் புதிய வாக்குச்சீட்டு வழங்கப்படும்.
- ஒரு வாக்காளரின் வாக்கினை வேறு ஒருவர் அளித்திருந்தால், உரிய வாக்காளருக்கு கேட்டுப் பெறும் வாக்கு சீட்டு வழங்கப்படும். இவ்வாறான வாக்குச்சீட்டுகள் வேறு வர்ணத்தில் காணப்படும் என்பதால் அதனை வழங்கும் முன்னர் வெளிப்படுத்தல் ஒன்றில் ஒப்பம் இடவேண்டும். அதேபோல், உரிய வாக்காளரின் பெயர் கேட்டுப் பெறும் வாக்காளர்பட்டியலில் சேர்க்கப்படும்.


உள்ளே
IN
01 வாக்காளரின் பெயரையும் இலக்கத்தையும் உரத்தக் குரலில் வாசித்தல்.
02 வாக்காளரின் அடையாளத்தை உறுதி செய்துகொள்ளுதல்.
03 வாக்குச் சீட்டை கிழித்தெடுத்தல்.
04 வாக்குச் சீட்டில் அலுவலகமுறையான இலச்சினையை இடுதல்.
05 வாக்காளர் இடாப்பில் குறியீடு இடுதல்.
06 இடதுகையின் சிறுவிரலில் அழியாதமையைப் பூசுதல்.
07 வாக்காளருக்குவாக்குச் சீட்டைவழங்குதல்.
08 வாக்குச் சீட்டில் புள்ளடி இடுதல்.
09 வாக்குச் சீட்டினை மடித்து பெட்டியினுள் இடுதல்.
வெளியே
OUT

# 7. எம்முடன் இணைய ஒரு வாய்ப்பு

## 7.1 ப∴வ்ரல் அமைப்பு

ப∴வ்ரல், தேசிய மட்டத்திலான சில சிவில் சமூக அமைப்புகளின் பிரதிநிதிகளால் 1987இல் ஆரம்பிக்கப்பட்டது. இந்த அமைப்பு கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலாப நோக்கற்ற ஒன்றாக பதிவுசெய்யப்பட்டுள்ளது. அதேபோல், வன்முறைகள் மற்றும் தேர்தல் சட்ட மீறல்கள் காரணமாக போட்டியின் சரிநிகர் வாய்ப்புக்கு குந்தகம் ஏற்படுவதால், தேர்தல்களில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக சிவில் சமூக அமைப்புகளின் இடையீடு அவசியமென உணரப்பட்ட காலத்தில் ப∴வ்ரல் உதயமானது. ப∴வ்ரல் ஆரம்பிக்கப்பட்டதன் முக்கிய நோக்கம் தேர்தலுக்கு முன்னரும், தேர்தலுக்குப் பின்னரும் வன்முறைகள் மற்றும் மோசடிகளைத் தடுப்பதற்கான மக்களின் முயற்சியை ஊக்குவிப்பதாகும். ப∴வ்ரல் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் நாட்டில் நடத்தப்பட்ட எல்லாத் தேர்தல்களையும் பல்வேறு சிவில் சமூக அமைப்புகளுடன் இணைந்து அவதானித்து வந்துள்ளது. மேலும், பல ஆண்டுகளாக நாட்டின் பல பாகங்களில் வாக்காளர்களின் உரிமைகள், ஜனநாயகம், மனித உரிமைகள் மற்றும் நல்லாட்சி போன்ற விடயங்ள் தொடர்பான மதியுரை மற்றும் விழிப்புணர்வு செயலமர்வுகளை நடத்தியுள்ளது. ப∴வ்ரல் தனது சகல நடவடிக்கைகளிலும் பூரணமான நடுநிலையைப் பேணி வந்துள்ளது.

## 7.2 நோக்கு நோக்கு

அரசியல் ஞானத்தைக் கொண்டுள்ள அதேபோல், வலுவான பிரஜைகளுடன் ஜனநாயக விழுமியங்களை மதிக்கின்ற, ஆட்சியின் வகைகூறும் பொறுப்பையும் வெளிப்படைத் தன்மையையும் மேம்படுத்தும் ஜனநாயக பிரஜைகளை உருவாக்குதல்.

## 7.3 பணிக் கூற்று

மனசாட்சிக்கு மதிப்பளித்து பிரஜைகளின் உயிரோட்டமான பங்களிப்புடன் ஜனநாயக அரசியல் கலாசாரமொன்றைக் கட்டியெழுப்புவதற்கான மக்கள் இயக்கமொன்றைக் கட்டியெழுப்புதல் மற்றும் எல்லா தேர்தல்களும் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல்களாக அமைய ஊக்குவித்தல், உறுதிப்படுத்தல் மற்றும் நல்லாட்சியை பாதுகாப்பதற்காக துணை நிற்கும் இயக்கத்திறனுடைய சிவில் சமூகத்தைக் கட்டியெழுப்புதல்.

## 7.4 ப.்.வ்ரல் அமைப்பின் பிரதான செயற்பாடுகள்

ப.்.வ்ரல் முன்னெடுக்கும் சிவில் செயற்பாடுகளில் முதன்மை பெறும் நடவடிக்கைகள் வருமாறு

- தேர்தல் அவதானிப்பு
- வாக்காளர்களை விழிப்புணர்வு செய்தல்
- வாக்காளர் இடாப்புத் திருத்தச் செயற்பாட்டை வசதிப்படுத்தல்
- மார்ச் 12 இயக்கத்துடன் இணைந்து மாவட்ட ரீதியான விழிப்புணர்வை முன்னெடுத்தல்
- மார்ச் 12 இயக்கத்துடன் இணைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ஒன்றியம் சந்தப்பட்ட செயற்பாடுகள்

## 7.5 நீங்கள் எவ்வாறு ப.்.வ்ரல் அமைப்புடன் சம்பந்தப்படலாம்

- நீண்ட கால தேர்தல் அவதானிப்பாளராக
- நடமாடும் தேர்தல் அவதானிப்பாளராக
- தேர்தல் அவதானிப்பு பதவியணி உறுப்பினராக
- விழிப்புணர்வு நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளராக